# மாவதகம பிரதேச சபை

## குருநாகல் மாவட்டம்

-----------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 28 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 27 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 09 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடபட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மாவதகம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

------------------------------------------

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு தொடர்பாக மூலதனச் செலவுகள் ரூபா 20,173,706 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 18,742,519 என ரூபா 1,431,187 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மூலதன உதவி ரூபா 12,706,426 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 17,586,806 என ரூபா 4,880,380 இனால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறவேண்டிய மூலதன உதவி மீதி ரூபா 12,611,426 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 11,592,718 என ரூபா 1,018,707 இனால் குறைவாக காட்டப்பட்டுள்ளது.

(ஈ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மூலதன கடன்கொடுத்தோர் மீதி ரூபா 12,611,426 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 15,155,358 என ரூபா 2,543,932 இனால் மிகையாக காட்டப்பட்டுள்ளது.

(உ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமாக காணப்பட்ட பெறுமதி ரூபா 11,526,650 இற்கான காணிகள் மற்றும் கட்டடங்கள் நிதிக் கூற்றுக்களுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மூலதனச் செலவுகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய புதிய பஸ் நிலைய வரைபினை தயாரித்தல் மற்றும் தரையினை தயாரிப்பதற்காக ரூபா 2,266,278 இற்கான தொகையொன்று 105 ஆம் இலக்க செலவு விடயத்தின் கீழ் மூலதனச் சொத்துக்களின் திருத்தமும் பராமரிப்பு தொடர்பான மீண்டுவரும் செலவு விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு ரூபா 2,014,075 இற்கான கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்தின் பெறுமதியினை நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை. அதே போல் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு தேசிய பிலிசரு செயற்திட்டத்தில் இருந்து கிடைக்க வேண்டியிருந்த மற்றும் குறிப்பிட்ட ஒப்பந்த நிறுவனத்திற்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 1,061,276 இனையும் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஏ) முன்னைய ஆண்டு தொடர்பாக மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 376,595 இற்கான சம்பள மீளளிப்பு தொகை மீளாய்வாண்டிற்கான சம்பள மீளளிப்பு பெறுவனவு என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மின்சார மற்றும் பொது களஞ்சிய மீதி ரூபா 459,157 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 137,360 என ரூபா 321,797 இனால் குறைவாக எடுக்கப்பட்டிருந்தது.

(ஒ) மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருந்த ரூபா 876,400 இற்கான பெறுமதி கூடியவரி மற்றும் ரூபா 144,738 இற்கான தேசத்தை கட்டியெழுப்பும் வரி தொடர்பாக சீராக்கல்கள் வருட இறுதியில் செலுத்த வேண்டிய வரிப் பொறுப்புக்களை கணிக்கும் போது கவனத்தில் எடுத்திருக்கவில்லை.

(ஓ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நூலகப் புத்தகங்களின் பெறுமதி ரூபா 5,326,917 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 5,558,198 என ரூபா 231,281 மிகையாக எடுக்கப்பட்டுள்ளது.

1.3.2 எதிர்பாராத பொறுப்புக்கள்

-----------------------------------------

பிரதேச சபையில் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்த வேண்டிய ஊழியர்கள் தொடர்பாக சபையினால் ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புத் தொகை முறைப்படி செலுத்தப்படாமையால் மீளாய்வாண்டு இறுதி வரை அந் நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 3,371,243 ஆக காணப்பட்டது.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு மீதியின் கீழ் 7 கணக்கு விடயங்கள் தொடர்பாக கணக்குகளின் பிரகாரம் மற்றும் தொடர்புடைய பதிவேடுகளின் பிரகாரம் நேரொத்த பெறுமதியிடையே ரூபா 3,420,132 இற்கான இணக்கமின்மைகள் காணப்பட்டது.

1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 39,621,260 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 3,457,650 தொகை 3 வருடங்களை விட பழமையான மீதியாகும்.

(ஆ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 29,688,340 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 5,153,341 தொகை 3 வருடங்களை விட பழமையான மீதிகளாகும்.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

--------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 12,537,204 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக விரிவாக பரிசோதனை மேற்கொள்ள முடியவில்லை.

1.3.6 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

------------------------------------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது முற்பணங்களின் கீழ் காணப்பட்ட ரூபா 182,250 தொகையும், கொங்கிரீட் செயற்திட்ட கடன் பட்டோர் ரூபா 1,372,582 வும் எவ்வாறு ஏற்பட்டது என இனங்காணாமல் மற்றும் முறையான அங்கீகாரம் இன்றி முறையே நாட்குறிப்பு இலக்கம் 37 மற்றும் 38 இன் மூலம் திரண்ட நிதியத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது.

2 நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதி விளைவுகள்

----------------------------

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 3,336,192 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 716,466 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 4,097,658 இற்கான வீழ்ச்சி ஒன்று காணப்பட்டது. நிதி விளைவிற்கு ரூபா 18,348,731 இற்கான மூலதன உதவி மற்றும் ரூபா 23,725,326 இற்கான மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போதும் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 8,712,787 வரை அதிகரித்துள்ளது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

-------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு தொடர்பாக சபையின் மொத்த மீண்டுவரும் வருமானங்கள் ரூபா 55,161,590 இல் நூற்றிற்கு 80 ஆகிய ரூபா 44,334,604 தொகை உருவாக்கிய வருமானமல்லாத நீதி மன்றத் தண்டப்பணம், முத்திரைக் கட்டணம், சம்பள மீளளிப்பு போன்ற படிகள் தன்மையுள்ள பெறுவனவுகள் அடங்கியுள்ளது. அதே போல் ரூபா 18,348,731 இற்கான மொத்த மூலதன வருமானமும் கமநெகும, மகநெகும போன்ற மூலங்களில் இருந்து வேறு நிறுவனங்களில் இருந்து அதிகார பிரதேச அபிவிருத்தி வேலைகளுக்காக கிடைத்த பணம் அடங்குகின்றது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவாகிய ரூபா 58,497,782 இல் நூற்றிற்கு 60 ஆகிய ரூபா 35,165,205 தனிப்பட்ட சம்பள செலவு ஆக காணப்பட்டதுடன் அவற்றில் நூற்றிற்கு 57 ஆக ரூபா 20,163,541 இற்கான சம்பள மீளளிப்பு என உள்ளுராட்சி ஆணையாளரிடம் கிடைத்து வேறு வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதே போல் மூலதன செலவாகிய ரூபா 23,725,326 இல் நூற்றிற்கு 31 ஆகிய ரூபா 7,467,280 தொகை சபை நிதியத்தில்

இருந்து செலவிடப்பட்டிருந்தது. அத்துடன் மீதி நூற்றிற்கு 69 ஆகிய ரூபா 16,258,046 தொகை கமநெகும, மகநெகும ஆகிய மூலங்கள் மீது வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகள் அடங்கியுள்ளன.

2.3 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

---------------------------------------------------------------

2010 ஆண்டு முதல் 2013 ஆண்டு வரை ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு அனுப்ப வேண்டிய பங்களிப்புத் தொகை சபையினால் அனுமதிக்கப்படாமல் 2013 ஆண்டின் போது அந்நிதியத்திற்கு மிகை விதிப்பாக ரூபா 21,370 தொகை சபையினால் செலுத்தப்பட்டிருந்தது.

2.4 வருமான நிருவாகம்

--------------------------------

2.4.1 வருமான சேகரித்தல் செயலாற்றுகை

---------------------------------------------------------

வியாபார அனுமதிப்பத்திரம், வாடகை, குத்தகை போன்ற வருமானங்கள் வெளிக்களத்தில் சேகரிப்பதற்காக சட்ட ஏற்பாடுகள் விதித்தில்லாத போது சபை நிதி சேகரிப்போரினால் ஆண்டு பூராகவும் அவ்வாறான வருமானங்கள் வெளிக்களத்தில் சேகரிக்கப்பட்டிருந்தது.

2.4.2 வீதவரி

-----------

மீளாய்வாண்டு இறுதியாக உள்ளவாறு நிலுவை வீதவரி ரூபா 3,536,503 ஆக காணப்பட்டதுடன் வருடாந்த பில் போடப்படல் ரூபா 1,605,700 ஆகும். அதற்கான நிலுவை பட்டியல் தயாரிக்கப்பட்டிருந்த போதும் இறுதி அறிவித்தல் 60 அலகுகள் தொடர்பாக ரூபா 323,162 தொகைக்கு மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது. அத்துடன் அத்தொகை ஒட்டுமொத்த வீதவரி பகுதியை பிரதிநிதிப் படுத்தக் கூடிய விதமாக தெரிவு செய்திருக்கவில்லை. அவற்றில் நூற்றிற்கு 23 ஆகிய ரூபா 74,347 தொகை மாத்திரமே அறிவிடப்பட்டிருந்தது. அதே போல் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 4 அரசாங்க நிறுவனங்களில் இருந்து ரூபா 277,343 வீதவரி அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.4.3 கடைவாடகை

---------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சந்தையிலுள்ள 14 கடைகளில் தொடர்பாக மாதாந்த தவணைகள் 4 – 103 இடைப்பட்ட வீச்சில் ரூபா 329,708 தொகையொன்று நிலுவையாக காணப்பட்டது. அதே போல் 4 தற்காலிக கடைகள் தொடர்பாக ரூபா 1,144 தொகையும் 2 அங்காடி காடைகள் தொடர்பாக ரூபா 19,902 தொகையும் நீண்ட காலமாக அறிவிடப்பட வேண்டியிருந்தது. மேலும் வேறு 4 கடைகள் தொடர்பாக ரூபா 1,055,045 நிலுவை ஒன்று காணப்பட்டதுடன் அவற்றில் 1,008,976 தொகை சினிமா கொட்டகை ஒன்றிற்கு கட்டடமொன்று வாடகைக்கு கொடுத்தது தொடர்பானதாகும்.

(ஆ) 2009 ஆண்டின் போது ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் உதவியின் கீழ் பெற்றிருந்த ரூபா 700,000 தொகையில் நடமாடும் 20 அங்காடிக் கடைகள் தயாரித்து மாதாந்த கடன் தவணைகள் ரூபா 1,004 வீதம் 3 ஆண்டுகளில் அறவீடு

செய்யும் அடிப்படையில் மற்றும் மாதாந்த வாடகை ரூபா 200 இற்கு வழங்கப்பட்டிருந்தது. அக் கடைகள் தொடர்பாக 2012 ஆகஸ்ட் 31 திகதி அளவில் கடன் தவணைகள் செலுத்தி முடிந்திருக்க வேண்டும் எனினும் கடன் தவணைகளின் அறவீடுகள் தொடர்பாக பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்காமையால் மேலும் அறவிடப்பட வேண்டிய கடன் தவணைகள் காணப்பட்டவர் என பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. பேணப்பட்டிருந்த வாடகை பதிவேட்டின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 11 கடைகள் தொடர்பாக கடன் தவணை மற்றும் வாடகையாக ரூபா 94,290 நிலுவை ஒன்று காண்பபட்டது.

2.4.4 வர்த்தக வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திர கட்டணம்

-----------------------------------------------------------------------------------------------

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 150(1) மற்றும் 152(1) பிரிவுகளின் பிரகாரம் கைத்தொழிலின் மற்றும் வர்த்தக நிறுவனங்களின் பற்றிய பட்டியல் தயாரிக்கப்பட்டு செயலாளருக்கு சமர்பிக்கப்பட்டிருந்த போதும் சபையினால் விதிக்கப்பட்ட வரியை கைத்தொழிலாளர்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களில் இருந்து 7 நாட்களில் செலுத்துமாறு பி.ச. 26 படிவத்தின் மூலம் அறிவித்திருக்கவில்லை. அதே போல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாத நபர்களை இனங்கண்டு அறிவித்தல் அல்லது மேற்கூறிய விதியின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

3 செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------

3.1 முகாமைத்துவ திறமையின்மை

-------------------------------------------------

பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் 2008 ஆண்டு முதல் 2011 ஆண்டு வரை காலப்பகுதியில் அங்கீகரிக்கப்பட்டிருந்த 259 கட்டட அனுமதிப்பத்திரங்களில் மீளாய்வாண்டு இறுதி வரை இணக்கச் சான்றிதழ் பெற்றிருக்காத 213 இடங்கள் காணப்பட்டன. அக்கட்டடங்கள் அனைத்தும் நிர்மாணிக்கப்பட்டிருந்ததால் சபையின் துணை விதிகளின் பிரகாரம் ரூபா 159,750 இற்கான இணக்கச் சான்றிதழ் வருமானம் ஒன்றும், கால நீடிப்புக் கட்டணமாக ரூபா 370,500 வருமானம் ஒன்று சபைக்கு உழைக்கக் கூடியதாக இருந்தது.

(ஆ) மாவத்தகம பொது சந்தை மாட்டிறைச்சிக் கடைக்காக 2006 ஆண்டின் போது ரூபா 29,300 இற்கான நிலுவை வாடகை அறவீடு செய்வதற்காக 2008 ஜுன் 10 ஆந் திகதி தாக்கல் செய்திருந்த இலக்கம் 12144∴19 வழக்கிற்காக நீதி மன்றத்தினால் அனுப்பியிருந்த அழைப்பு அறிவித்தலை ஒப்படைப்பதற்கான எதிராளியின் அழைப்பு அறிவித்தலை ஒப்படைப்பதற்கான எதிராளியை கண்டுபிடித்திருக்காமையால் 2013 திசெம்பர் வரை வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பீலஸ்ஸ இஹலகம பாதையை கொங்கிரீட் போடுவதற்காக சபையினால் ரூபா 199,640 தொகை ஒன்று முற்பணமாக ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தக்காரரினால் சுமார் ரூபா 79,120 பெறுமதியான வேலை மேற்கொள்ளப்பட்டு ஒப்பந்த வேலையை விட்டுச் சென்றுள்ளனர். இதன் மூலம் சபைக்கு ஏற்பட்டுள்ள நட்டம் ரூபா 120,520 இனை அறவீடு செய்வதற்காக 2008 ஆம் ஆண்டில் சபையினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அத்துடன் தகுதியான பொறியியலாளர் ஒருவரின் அளவை அறிக்கையை பெற்று சமர்பிக்கும் படி நீதி மன்றத்தினால் அறிவித்திருந்த போதும் இது வரை சபையினால் அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

(ஈ) சாட்டுதல் காணி உறுதி ஒன்றின் கீழ் சபைக்கு சாட்டப்பட்டிருந்த சுமார் 80 பர்சஸ் காணியில் சபையினால் நூலகம் மற்றும் கொங்கிரீட் வேலைத்தளம் ஒன்று நடத்தப்பட்டிருந்தது. எனினும் கொங்கிரீட் செயற்திட்டம் செயற்படாமையால் அக்காணி வேறு ஒரு தேவைக்கும் பயன்படுத்தப்படாமையால் 15 வருடங்கள் செயற்படாது காணப்பட்டமையால் சாட்டுதல் செய்தவர் அக்காணியை விற்பனவு செய்திருந்தார். அதனை பெற்றவருக்கும் மற்றும் பிரதேச சபைக்கும் இடையே காணியின் உரிமை தொடர்பாக காணப்பட்ட முரண்பாடு காரணமாக 2008 ஆண்டின் போது சபையினால் கொழும்பு உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அத்துடன் 2013 ஆண்டின் போது சபைக்கு சார்பான முறையில் தீர்ப்பு ஒன்று கிடைத்திருந்தது. குறிப்பிட்ட எதிராளி சார்பினர் அத்தீர்பிற்கு எதிராக மேன்முறையீடு ஒன்று செய்திருந்தது. மீளாய்வாண்டு இறுதி வரை வழக்கு இணக்கத்திற்கு வந்திருக்கவில்லை. குறிப்பிட்ட காணி பயன்படுத்தப்படாமல் காணப்பட்டதால் எற்பட்ட இந்த வழக்கின் காரணமாக 2008 ஆண்டு முதல் 2013 திசெம்பர் வரை சபை நிதியத்தில் இருந்து ரூபா 389,980 செலவிடப்பட்டிருந்தது.

(உ) 2010 பெப்ரவரி முதல் 2013 திசெம்பர் வரையான காலப்பகுதி தொடர்பாக ஊழியர் சேமலாப நிதயத்திற்கு எழுதப்பட்டிருந்த ரூபா 1,343,619 பெறுமதியான 38 காசோலைகளும், ஓய்வூதிய நிதியத்திற்கு எழுதப்பட்ட ரூபா 487,755 பெறுமதியான 14 காசோலைகளும், தேசிய காப்புறுதி பொறுப்பு நிதியத்திற்கு எழுதப்பட்டிருந்த ரூபா 123,900 பெறுமதியான 15 காசோலைகளும், ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு எழுதப்பட்டிருந்த ரூபா 113,950 பெறுமதியான 23 காசோலைகளும், ஏனைய நிறுவனங்களுக்கு அனுப்ப வேண்டிய சம்பள கழிப்பனவுகள் என எழுதப்பட்ட ரூபா 162,219 இற்கான 58 காசோலைகளும் குறிப்பிட்ட சாரார்களுக்கு அனுப்பியிருக்கவில்லை. இதன் காரணமாக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதயத்திற்கு மீளாய்வாண்டின் போது மாத்திரம் தாமதத் தண்டப்பணமாக ரூபா 21,370 மற்றும் சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டுள்ளது. அத்துடன் 2010 முதல் குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு அனுப்பப்படாமல் காணப்பட்ட ரூபா 2,231,443 தொகை தொடர்பாக தண்டப்பணமும் செலுத்த வேண்டி ஏற்படக்கூடிய ஆபத்து ஒன்று காணப்பட்டது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அதே போல் காப்புறுதி தவணைப்பணம் குறிப்பிட்ட நிதியத்திற்கு கிடைக்கப் பெறாமையால் தற்போது காப்புறுதி நலன் விண்ணப்பிக்கும் அலுவலர்களின் அந் நலன்களும் இடை நிறுத்தப்பட்டிருந்தன.

3.2 திண்ம கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம்

-----------------------------------------------------------------------

சபையின் பிலிஸரு திண்மக் கழவுப்பொருட்கள் முகாமைத்துவ செயற்திட்டத்திற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் ரூபா 6,070,158 வழங்குதவற்கு இணங்க 03 மாதங்களில் வேலையை பூர்த்தி செய்வதற்கு 2011 ஜனவரி 04 திகதி உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரை குப்பைகளை குவித்தல் மற்றும் வகைப்படுத்தலுக்கான இடம் தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை. அத்துடன் நீர் மற்றும் மின்சாரம் வழங்கல் பாதுகாப்பு வேலி கேட் நிர்மாணித்தல் போன்ற வேலைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதே போல் மத்திய சுற்றாடல் அதிகார சபையிலிருந்து 2012 செப்டம்பர் 05 திகதிய உரம் உற்பத்தி செய்வதற்காக பயன்படுத்தப்படும் துணை கருவிகளுடன் சேதனப் பசளை அரிக்கும் இயந்தரம் சபைக்கு வழங்கியிருந்த போதும் வருட இறுதி வரை அதனை பொருத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் இந்த இடம் பிரதான பாதையில் இருந்து 03 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளதால் மின்சாரம் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் சபை காணப்பட்டது.

4 கணக்கு நடவடிக்கை தன்மையும் நல்லாட்சியும்

---------------------------------------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

--------------------------------

மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் பிரகாரம் ஏனைய வருமானங்கள் ரூபா 16,380,000 இற்கான வருமானம் ஒன்று மதிப்பிடப்பட்டிருந்த போதும் அவற்றில் நூற்றிற்கு 82 ஆகிய ரூபா 13,354,000 மாத்தரமே நெருங்கியிருந்தது. அதே போல் மூலதன வருமானத்தின் கீழ் ரூபா 61,000,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் அவற்றில் நூற்றிற்கு 30 ஆகிய ரூபா 18,349,000 மாத்திரமே நெருங்கியிருந்தது.

5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

----------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(இ) பாதீட்டுக் கணக்கு

(ஈ) வருமான நிருவாகம்

(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(ஊ) ஒப்பந்த நிருவாகம்